# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 090 | திங்கள் Monday | 29.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode


# சென்னை பாலவாக்கத்தில் போலியோ சொட்டு மருந்து முகாமை முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார்




சென்னை: 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாமை, சென்னை பாலவாக்கத்தில் உள்ள அரசு பள்ளியில்முதலமைச்சர்விஜய் காலை 9:30 மணிஎவில் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தேசிய போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் இன்று (ஜூன் 28) நடைபெற்று வருகிறது. இந்த சிறப்பு முகாமை பாலவாக்கத்தில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் முதலமைச்சர்சி.ஜோசப் விஜய் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முதலமைச்சர் விஜய் போலியோ சொட்டுமருந்து வழங்கினார்.மேலும்,போலியோ சொட்டு மருந்து எடுத்துக் கொண்ட குழந்தைகளுக்கு பொம்மைகளையும் அவர் பரிசாக வழங்கினார்.

மாநிலம் முழுவதும் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், முக்கிய பொது இடங்கள் உள்ளிட்ட மொத்தம் 43,051 மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.

இந்த முகாமின் மூலம் 0முதல்5வயதிற்குட்பட்ட 52.91 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தேசிய தடுப்பூசி அட்டவணையின்படி ஏற்கனவே போலியோ சொட்டு மருந்து பெற்றிருந்தாலும், முகாம் நாளில் அனைத்து குழந்தைகளுக்கும் மீண்டும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட வேண்டும் என மருத்துவத் துறை தெரிவித்துள்ளது. முக்கிய பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், சுங்கச் சாவடிகள், சோதனைச் சாவடிகள் மற்றும் விமான நிலையங்களில் தற்காலிக மையங்கள் (Transit Booths) அமைக்கப்பட்டு, பயணத்தில் உள்ள குழந்தை களுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.

போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்கள் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து மையங்களிலும்,ஜூன் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் தற்காலிக மையங்களிலும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும். பிற மாநிலங்களிலிருந்து வந்து தமிழ்நாட்டில் வசிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் இம்முகாமின் மூலம் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும்.

மேலும், தொலைதூர மற்றும் மலைப்பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு நடமாடும் மருத்துவக் குழுக்கள் மூலம் போலியோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தவறாமல் போலியோ சொட்டு மருந்து போட்டுக்கொள்ள வேண்டும் என பெற்றோர்கள் மத்தியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது எனப்து குறிப்பிடத்தக்கது.

# 72 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் இயக்குனர் பாக்யராஜ் உடல் தகனம்



தமிழ் சினிமாவில் இயக்குனர், நடிகர், திரைக்கதை எழுத்தாளர்,வசனகர்த்தா,இசையமைப்பாளர் என பன்முக திறமையால் பளிச்சிட்டவர் பாக்யராஜ். ரசிகர்களின் மனநிலையை சரியாக புரிந்து,சாதாரணகுடும்ப வாழ்க்கையை சுவாரசியமான திரைக்கதையாக மாற்றிய படைப்பாளி பாக்யராஜ், 'திரைக்கதை மன்னன்' என்று திரையுலகில் கொண்டாடப்பட்டார்.

இந்தநிலையில்,இயக்குனர் பாக்யராஜ் மாரடைப்பால் நேற்று மரணம் அடைந்தார். நேற்று அதிகாலை எழுந்து நடைபயிற்சி முடித்து வீடு திரும்பியுள்ளார். அப்போது வந்த செல்போன் அழைப்பை ஏற்று பேசிக் கொண்டிருந்த பாக்யராஜ் திடீரென மாரடைப்பு ஏற்பட,அப்படியேமயங்கி சரிந்தார். அதனைத்தொடர்ந்து அவர் கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் செல்லும் வழியிலேயே பாக்யராஜின் உயிர் பிரிந்தது. அவருக்கு வயது 73.

அதன்பின்னர் பாக்யராஜின் உடல், சென்னை நுங்கம்பாக்கத் தில் உள்ள அவரது இல்லத்துக்கு கொண்டுவரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு அவரது உடலுக்கு முதல்-அமைச்சர் விஜய் உள்பட அரசியல் கட்சித் தலைவர்கள் அமைச்சர் விஜய் மற்றும் நடிகர்-நடிகைகள் அஞ்சலி செலுத்தினர். பொதுமக்கள் அஞ்சலி நிறைவு பெற்றதையடுத்து மறைந்த இயக்குனர் பாக்யராஜ் உடலுக்கு இறுதி சடங்குகள் நடைபெற்றன.பின்னர்காவல்துறை அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து பாக்யராஜின் இறுதி ஊர்வலம் தொடங்கியது. பாக்யராஜ் உடலை நடிகர்கள் சரத்குமார், பார்த்திபன் ஆகியோர் தோளில் சுமந்து சென்றனர்.இறுதி ஊர்வலத்தில் திரையுலகினர் பங்கேற்றனர். இறுதி ஊர்வல வாகனத்தில் மனைவி பூர்ணிமா,மகன் சாந்தனு இருந்தனர். நுங்கம்பாக்கம் இல்லத்தில் இருந்து பெசண்ட் நகர் மின் மயானத்திற்கு உடல் எடுத்துச் செல்லப்பட்டது. வழிநெடுகிலும் சாலையின் இருபுறமும் திரண்டிருந்த மக்கள் பாக்யராஜுக்கு பூக்களை தூவி கண்ணீர் மல்க இறுதி அஞ்சலி செலுத்தினர். சுமார் 1 மணி நேரத்திற்கு பிறகு பாக்யராஜ் உடல் பெசண்ட் நகர் மின்மயானத்திற்கு வந்தடைந்தது.

பாக்யராஜ் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என்று முதல்-அமைச்சர் விஜய் அறிவித்திருந்தார். அதன்படி தமிழக அரசு சார்பில் அமைச்சர்கள் என்.ஆனந்த், ராஜ்மோகன் ஆகியோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். அதைத்தொடர்ந்து 72 குண்டுகள் முழங்க இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. கம்பீரமாக அணிவகுத்து நின்ற போலீசார் தலா 3 முறை வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் பாக்யராஜ் உடலுக்கு அவரது சமுதாய முறைப்படி இறுதி சடங்குகள் நடைபெற்றன. அப்போது பாக்யராஜ் உடலுக்கு மனைவி பூர்ணிமா முத்தமிட்டு பிரியாவிடை கொடுத்தார். தொடர்ந்து மகன் சாந்தனு தந்தை பாக்யராஜுக்கு இறுதி சடங்கை செய்தார். அதன்பிறகு அவருடைய உடல் பெசண்ட்நகர்மின்மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. திரைக்கதை மன்னன் பாக்யராஜுக்கு திரைத்துறையினர், பொதுமக்கள் பிரியா விடை அளித்தனர்.

# மதிமுக முன்னாள் மாநில, மாவட்ட நிர்வாகிகள் 150 பேர் திமுகவில் ஐக்கியம்

சென்னை: மதிமுகவைச் சேர்ந்த முன்னாள் மாநில, மாவட்ட நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் 150க்கும் மேற்பட்டோர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.



இதுகுறித்து திமுக தரப்பில் வெளியான அறிக்கையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், இன்று (28.06.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில், ம.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் நிர்வாகிகளான சிவகங்கை மாவட்டச் செயலாளரும், உயர்நிலைக்குழு உறுப்பினருமான புலவர் செ.செவந்தியப்பன், திருவள்ளூர் மாவட்டச் செயலாளரும், உயர்நிலைக்குழு உறுப்பினருமான டி.ஆர்.ஆர்.செங்குட்டுவன், கொள்கை பரப்பு செயலாளரும், உயர்நிலைக்குழு உறுப்பினருமான திருப்பரங்குன்றம் பொடா அழகுசுந்தரம், விருதுநகர் மாவட்டச் செயலாளர் ஆர்.எம்.எஸ்.சேகர், மாநில தேர்தல் பணி துணைச் செயலாளர் தஞ்சாவூர் விடுதலைவேந்தன்,தலைமைச் செயற்குகுழு முன்னாள் உறுப்பினர் டி.ஆர்.ஆர். மதியழகன்;

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளான மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஆர்.எஸ்.கோவிந்தராஜன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ம.ராஜகோபால், சாமளாபுரம் பேரூர்ச் செயலாளர் எஸ்.செல்வராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளரும், பல்லடம் நகர்மன்ற துணைத் தலைவருமான நர்மதா இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், சாமிநாதன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கார்த்திக், பல்லடம் நகர துணைச் செயலாளர் ஜெகநாதன், பல்லடம் நகர்மன்ற முன்னாள் உறுப்பினர் வெங்கடேஷ்;

மற்றும் முன்னாள் நிர்வாகிகளான மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் புதுக்கோட்டை சதாசிவம், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் சிவகாசி மு. செல்வராஜ், திருப்பூர் ஆர்.எஸ்.கோவிந்தராஜன், நகரச் செயலாளர் எஸ்.கே.ரவிச்சந்திரன், ஆர்.எம்.எஸ்.சேகர், விருதுநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி வழக்கறிஞர் பாரதமணி, மதுரை மாவட்ட பொறியாளர் அணி சி.எல். ராஜா.

சிவகங்கை மாவட்ட நிர்வாகிகளான மாவட்ட அவைத்தலைவர் எம். ஜெயபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்களான என்.ராமச்சந்திரன், ஏ.சி. முத்து, பி.சதாசிவம், இளைஞர் அணி வி. அருள்செல்வம், பி.கந்தசாமி, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட பொறியாளர் அணிகே.ரகுராமகிருஷ்ணன், பொன்னேரி பேரூர்ச் செயலாளர் மதிவாணன், மோகன், ஞானவேல்.

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆகாஷ்ராஜ், அத்துடன் பொடா அழகுசுந்தரம் ஏற்பாட்டில் சென்னை அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக மாணவர்கள் ஏ. அன்பரசன் தலைமையில் 40 பேர் உள்ளிட்ட 150க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.


## வரி விளம்பரங்கள்

தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☏ +919444082959



## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



# விருத்தாசலத்தில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு புனரமைக்கப்பட்ட வகுப்பறை அமைச்சர் ராஜ்குமார் திறந்து வைப்பு

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாற்றுத்திறனாளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் புதுப்பிக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்ட சிறப்பு வகுப்பறையை, தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும்நகர்ப்புறவளர்ச்சித்துறை அமைச்சர் ராஜ்குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ஏற்ற வகையில்வகுப்பறையில் டைல்ஸ் அமைத்தல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளுடன் கட்டிடம் சீரமைக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டது. இந்த பணிகளை தவெக கடலூர் மாவட்ட இணை செயலாளர் சங்கர் தனது சொந்த செலவில் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் அமைச்சர் ராஜ்குமார் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு சீருடை, நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கியதுடன், பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மரக்கன்று நடும் விழாவையும்தொடங்கிவைத்தார். தொடர்ந்து மாற்றுத்திறனாளி மாணவர்களுடன் அமர்ந்து கலந்துரையாடி, அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

மேலும், விருத்தாசலம் மற்றும் திட்டக்குடி தாலுகாவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்ற அமைச்சர், அவற்றை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் எடுத்துரைத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். பின்னர் பள்ளியில் செயல்பட்டு வரும் நீட், ஜே.இ.இ. மற்றும் ஆன்லைன் வகுப்புகளை பார்வையிட்டு மாணவர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியை தவெக கடலூர் மாவட்ட இணை செயலாளர் சங்கர் ஏற்பாடு செய்திருந்தார். இதில் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் விஜய், மேற்கு மாவட்ட துணை செயலாளர் வாசு, நகர செயலாளர் அப்பாஸ் அலி, நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள், மாற்றுத்திறனாளி மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வேப்பூர் அருகே தரமற்ற பணியால் பெயர்ந்த தார் சாலை: அதிகாரிகள் ஆய்வு நடத்த கிராம மக்களின் கோரிக்கை



கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே உள்ள சிறுப்பாக்கம்-மா.குடிக்காடு வழியாக மாங்குளம் செல்லும் புறவழிச் சாலை, முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரூ.96 லட்சத்து 51 ஆயிரம் மதிப்பீட்டில் 2 கிலோமீட்டர் தொலைவிற்கு அமைக்கப்பட்டது. ஆனால், சாலை தரமற்ற முறையில் அமைக்கப்பட்டதாகவும், தற்போது சாலை பல இடங்களில் பெயர்ந்து உள்வாங்கி முற்றிலும் சேதமடைந்துள்ளதாகவும் கிராம மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.இதனால்பள்ளி பேருந்துகள், பொதுமக்கள் மற்றும் இருசக்கர வாகன ஓட்டிகள் உள்ளிட்டோர் சாலையை பயன்படுத்துவதில் கடும் சிரமம் அடைந்து வருவதாக கூறப்படுகிறது. மேலும், மழைக்காலங்களில் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்படுவதால் பொதுமக்கள் அவதியுறும் நிலை ஏற்பட்டுள்ளது. சாலை அமைக்கப்பட்டுஇரண்டு ஆண்டுகள் கூட ஆகாத நிலையில் இவ்வாறு சேதமடைந்திருப்பது குறித்து மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மேலும், சாலைக்கான ஐந்தாண்டு பராமரிப்பு செலவிற்காக கூடுதலாக ரூ.8 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து, சேதமடைந்த சாலையை உடனடியாக மறு சீரமைப்பு செய்து, பராமரிப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என மா.குடிக்காட்டைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ராம்குமார் உள்ளிட்ட கிராமமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோவையில் பயாண்ட் மீடியா சார்பாக நடைபெற உள்ள

# இன்டீரியோ மற்றும் எக்ஸ்டீரியோ கண்காட்சியின் பிராண்ட் அம்பாசிடர் அறிமுக விழா நிகழ்ச்சி

### கோவை அவினாசி சாலையில் உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது



கோவையில் வரும் ஆகஸ்ட் 7,8, மற்றும் 9 ஆகிய தேதிகளில் கொடிசியா அரங்கில் பயாண்ட் மீடியாவின் இன்டீரியோ மற்றும் எக்ஸ்டீரியோ கண்காட்சி நடைபெற உள்ளது..

இந்நிலையில் இது தொடர்பான பிராண்ட் அம்பாசிடர் அறிமுகவிழா அவினாசிசாலைகிராண்ட் ரீஜெண்ட் அரங்கில் நடைபெற்றது..

முன்னதாக, பயாண்ட் மீடியா நிறுவனத்தின் தலைவர் சுந்தரமூர்த்தி கிருஷ்ணன் மற்றும் நிர்வாக இயக்குனர் ஹேமா சுந்தரமூர்த்தி ஆகியோர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,கட்டுமானம், உள்துறை மற்றும் வெளித்துறை வடிவமைப்புத்துறைகளில் புதிய தொழில்நுட்பங்கள்,நவீன தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஒரே இடத்தில் அறிமுகப்படுத்தும் நோக்கில் இக்கண்காட்சி ஆகஸ்ட் 7, 8 மற்றும் 9 ஆகியதேதிகளில்கோவை கொடிசியா வர்த்தக கண்காட்சி மையத்தின் பி.மற்றும் சி ஆகிய அரங்குகளில் நடைபெற உள்ளதாக தெரிவித்தனர்..

17 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடைபெற்று வரும் இந்த கண்காட்சி, தற்போது தனது 13-வது பதிப்பை எட்டியுள்ளதாகவும்

கண்காட்சியுடன் இணைந்து கட்டுமான கண்காட்சியும் நடைபெறுகிறது. இதில் கட்டுமானம், இன்டீரியர், எக்ஸ்டீரியர், சிவில் இன்ஜினியரிங், கட்டிட வடிவமைப்பு உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் தங்களது புதிய தயாரிப்புகள், தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்த உள்ளதாக தெரிவித்தனர்..

இந்த ஆண்டுக்கான கண்காட்சியில் நாடு முழுவதும் இருந்து 400-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

மேலும் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக கூறிய அவர், தொழில்துறையினர், கட்டிடக் கலைஞர்கள்,இன்டீரியர்டிசைனர்கள், பில்டர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவருக்கும் பயனுள்ள வகையில் இந்த கண்காட்சி அமையும் என நம்பிக்கை தெரிவித்தனர்..

இதனைத் தொடர்ந்து, கண்காட்சிக்கான பிராண்ட் அம்பாசிடர் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தும் நிகழ்வு நடைபெற்றது.. இந்த நிகழ்வில் கண்காட்சியின் சிறப்பம்சங்கள், நோக்கம் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்தும்விரிவாகவிளக்கப்பட்டது.

# தூத்துக்குடியில் த.வெ.க. சார்பில் 15வது வார்டு இளைஞர்களுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கினர்



தூத்துக்குடியில் இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்கும் நோக்கில் கிரிக்கெட் வீரர்களுக்குக் கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் ஜோசப் விஜய் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் "போதைப் பழக்கத்தைத் தவிர்த்து, விளையாட்டைத் தேர்ந்தெடுப்போம்" என்ற சமூக விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, தூத்துக்குடி 15-வது வார்டில், அபிஷேக் பொன்சீலன் தலைமையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

விழாவில், இளைஞர்கள் விளையாட்டுகளில் அதிக கவனம் செலுத்தி, ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் ஒழுக்கத்தையும் கடைபிடிக்க வேண்டும் என்று நிர்வாகிகள் அறிவுறுத்தினர். இதற்கான ஏற்பாடுகளை மணிகண்டன் செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் 15-வது வார்டு வட்டச் செயலாளர் மாரியம்மாள், பிரதீக் ராஜ்கண்ணா, லட்சுமணன், சுதாகர் போஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாநகராட்சி, குமாரசாமிப்பட்டி, நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார்கள். உடன் சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், சேலம் மாநகராட்சி துணை மேயர் சாரதா மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு

# தென்காசி மாவட்டம் சுரண்டையில் தவெக சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம்

### மூத்த நிர்வாகி என்டிஎஸ் சார்லஸ் துவக்கி வைத்தார்



தென்காசி மாவட்டம் சுரண்டையில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் 52வது பிறந்த நாளை முன்னிட்டு திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் இன்று நடந்தது.

முகாமிற்கு தவெக மூத்த நிர்வாகி பரன்குன்றாபுரம் என்டிஎஸ் சார்லஸ் தலைமை வகித்து துவக்கி வைத்தார்

நகரசெயலாளர்கள் பி. கணேசன், அரவிந்த் முன்னிலை வகித்தனர் ஆலங்குளம் வடக்கு ஒன்றிய ஒன்றிய செயலாளர் எம்பிவி கதிர்வேல் வரவேற்றார்,

மாவட்ட மக்களிரணி அமைப்பாளர் சரஸ்வதி, இணை அமைப்பாளர் காளியம்மாள், இளைஞரணி சுதன், தியாக ராஜன், அழகையா, வழக்கறிஞர் வெங்கடேஷ் பாபு, தலைமை கழக பேச்சாளர் பாலமுருகன், ஒன்றிய இணை செயலாளர் லூர்து சாமி (ஏ) விஜி, பொருளாளர் ஜான்சன் ரமேஷ், மற்றும் நிர்வாகிகள் சிவா, சிவபெருமாள், கிருஷ்ணமூர்த்தி, மாதவன், காளிதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முகாமில் அரவிந்த் கண் மருத்துவமனை மருத்துவ குழுவினர் 225 பேர்களுக்கு பரிசோதனை செய்தனர் 65 பேர் அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டு சிகிச்சை பெற்றனர்

முன்னதாக முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் பிறந்த நாள் அன்று மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் 520 பேர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது குறிப்பிட த்தக்கது

# "ஆதாரமற்ற வதந்திகளை நம்ப வேண்டாம்" ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளை அறிக்கை



புதுடெல்லி: அயோத்தி ராமர் கோயில் காணிக்கை தொடர்பாக பரப்பப்படும் தவறான, ஆதாரமற்ற வதந்திகளை நம்ப வேண்டாம் என்று ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளை கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறக்கட்டளையின் பொருளாளர் சுவாமி கோவிந்ததேவ் கிரி வெளியிட்டுள்ள அறிக்கையில், "அயோத்தி ஸ்ரீராமர் கோயில் தொடர்பாக கடந்த சில நாட்களாக பேசப்படும் சம்பவங்களால் நாங்கள் அதிர்ச்சியும், வேதனையும், மிகுந்த துயரமும் அடைந்துள்ளோம்.

அனைத்து ராம பக்தர்களின் மற்றும் ராம சேவகர்களின் பிரதிநிதிகளாக இங்கு சேவை செய்யும் நாங்கள், இது குறித்து நியாயமான விசாரணை நடத்தவும், ராம பக்தர்களுக்கு உறுதியளிக்கவும் கடமைப்பட்டுள்ளோம். ஸ்ரீ ராமஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா(அறக்கட்டளை) பொதுச்செயலாளர் சம்பத் ராய் மற்றும் அறங்காவலர் அனில் மிஷ்ரா ஆகியோரிடமிருந்து ராஜினாமா கடிதங்கள் பெறப்பட்டுள்ளன. அறக்க ட்டளை தனது அடுத்த கூட்டத்தில் இது குறித்து ஆலோசிக்கும். பிரபுஸ்ரீராமரின்சேவையில் அர்ப்பணிப்பதற்காக, அறக்கட்டளையின் அதிகாரிகளிடம் தனிப்பட்ட முறையில் வெள்ளி செங்கற்கள், ஆபரணங்கள் போன்றவற்றை வழங்கிய விசுவாசமுள்ள பக்தர்களுக்கு அறக்கட்டளை உறுதியளிக்கிறது. அந்தப் பொருட்கள் அனைத்தும் பாதுகாப்பான கணக்கு விபரங்களுடன் பத்திரமாக உள்ளன. கோவில் உண்டியல்களில் இருந்து பெறப்பட்ட பணம் தொடர்பான சம்பவத்தைப் பொறுத்தவரை, அறக்கட்டளையின் கோரிக்கையின் பேரில் உத்திரப்பிரதேச அரசால் அமைக்கப்பட்ட S.I.T.(சிறப்புவிசாரணைக் குழு) வழங்கிய இடைக்கால அறிக்கையின் அடிப்படையில், அறக்கட்டளை எஃப்.ஐ.ஆர் (F.I.R.) பதிவு செய்துள்ளது மற்றும் அதன் மீது சட்டப்பூர்வ நடவடிக்கைகள் தொடர்கின்றன.

எதிர்காலத்தில் இதுபோன்ற துரதிர்ஷ்ட வசமான சூழ்நிலைகள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வோம் என்று நாங்கள் அனைவருக்கும் உறுதியளிக்கிறோம். குற்றவாளிகளுக்குச் சட்டப்படி தகுந்த கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்போம். மத விரோத,சுயநலசக்திகள் சனாதன தர்மத்தின் மீது களங்கம் விளைவிக்க முயல்வதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

தயவுசெய்து பரப்பப்படும் தவறான மற்றும் ஆதாரமற்ற வதந்திகளை நம்ப வேண்டாம், மற்றவர்களையும் இதற்கு பலியாகாமல் தடுத்திடுங்கள்.

# கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் திருநங்கைகளின் வாழ்வியலை உயர்த்தும் விதமாக "மதிலை தாண்டு" நிகழ்ச்சி

## திருநங்கைகளுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் அமைச்சர் சம்பத் குமார், பிரபல பாடகர் வி.வி. பிரசன்னா விருது வழங்கினர்



கோவை ஆர் எஸ் புரம் பகுதியில், திருநங்கைகளின் வாழ்வியலை உயர்த்தும் விதமாக "மதிலை தாண்டு" என நிகழ்ச்சி மூலமாக உதவிக்கரம் நீட்டியது கெப்சரா பவுண்டேஷன் எனும் தன்னார்வ அமைப்பு.. நெருக்கடிகளை கடந்து சாதித்து வரும் திருநங்கைகளுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் விருது வழங்கிய கௌரவித்த அமைச்சர் சம்பத் குமார் மற்றும் பிரபல பாடகர் வி.வி. பிரசன்னாபொது சமூகத்தில்கடும்நெருக்கடிகளை சந்தித்து வரும் திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், சவால்களை தகர்த்து சாதித்து வரும் திருநங்கைகளுக்கு விருதுகள் வழங்கி கௌரவப்படுத்தும் நிகழ்வாக "மதிலை தாண்டு"எனும்நிகழ்ச்சி, கெப்சரா வுண்டேஷன் சார்பாக நடைபெற்றது. கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் உள்ள மாநகராட்சி கலையரங்கத்தில் நடைபெற்ற இந்த, "மதிலைதாண்டு" தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார், கோவை மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா, பிரபல பின்னணி பாடகர் பிரசன்னா உள்ளிட்டோர் கலந்து கொண்டு திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், சாதனையாளர்களுக்கு விருதுகளையும் வழங்கி கௌரவித்தனர். தமிழ்நாட்டின் முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் தாயார் ஷோபா சந்திரசேகர் காணொளி காட்சியின் வாயிலாக விழாவில் வாழ்த்துரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் சம்பத்குமார் பேசும்பொழுது, சமூகத்தில்திருநங்கைகள் கடும் சவால்களை சந்தித்து வருகின்றனர் என்றும், சவால்களை சந்தித்து சமூகத்தில் தங்களுக்கான அங்கீகாரத்தை பெற எனது சகோதரிகளான திருநங்கைகள் அனைவருமே சாதனையாளர்கள் என திருநங்கைகளை ஊக்கப்படுத்தினார். தமிழ்நாட்டின் முதல்வர் விஜய் அவர்கள், திருநங்கைகளின் வாழ்வியலை மேம்படுத்த உறுதுணையாக இருப்பதாக தெரிவித்த அமைச்சர் சம்பத், எப்பொழுது வேண்டுமானாலும் என்ன உதவி வேண்டுமானாலும் உரிமையோடு கேளுங்கள் என திருநங்கைகளிடம் அமைச்சர் சம்பத் அன்பு கட்டளையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் கெப்சரா பவுண்டேஷன் நிறுவனரும், இந்தியாவின் முதல் பெண் மாற்றுத்திறனாளி இசையமைப்பாளருமான மேரி ஜெனிட்டா, பாலமலை மற்றும் பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் உள்ள அரசு பள்ளி மாணவ மாணவியருக்கு நோட்டு புத்தகங்கள் பேக்குகள் பரிசுகள் உள்ளிட்டவை வழங்கி உதவிக்கரம் நீட்டினார்




மதுரை தனக்கன்குளத்தில் உள்ள சி எஸ் ஆர் தனியார் பள்ளியில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு ஸ்கேட்டிங் பேரணி நடைபெற்றது. இப்பேரணியை மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் கோபிஷன் துவக்கி வைத்தார் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் கலந்து கொண்ட நிலையில் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்றரை கிலோ மீட்டர் வரை போதை ஒழிப்பு வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியபடி ஸ்கேட்டிங் செய்து கொண்டே பொதுமக்களுக்கு விழிப்புணர்வைஏற்படுத்தினர். திருநகர்சிஎஸ்ஆர்பள்ளியிலிருந்து புறப்பட்ட இப்பேரணி திருநகரில்முக்கியபகுதிகளில் சென்று அண்ணா பூங்கா அருகே நிறைவடைந்தது

## கோவை சிவாஜி காலனி பகுதியில்

# தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக கலப்பு திருமண நிகழ்ச்சி நடைபெற்றது

## இந்துமத முறைப்படி திருமணம் நடைபெற்றது



கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டலஅலுவலகம்அமைந்துள்ளது. இக்கட்சியின் மாநில துணை தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார். இவரது தலைமையில் இன்று கலப்பு திருமணம் நடைபெற்றது. விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்தவர் பிரசாந்த் 26,வயதான இவர், கோவை மாவட்டத்தை சேர்ந்த சிபியா சாரால், என்ற 23 வயது பெண்ணை, திருமணம் செய்து கொண்டார்.

இருவரும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக காதலித்து வந்தனர். இருவரும் வேறு, வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் இருப்பினும், இருவரது வீட்டினர்சம்மதத்துடன் இந்து மத முறைப்படி மாலை மாற்றியும், தாலி கட்டியும் திருமணம் செய்து கொண்டனர். தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரது வீட்டு உறுப்பினர்கள்பலர்முன்னிலையில், திருமணம்நடந்து முடிந்ததும், அனைவருக்கும் இனிப்புகள் வழங்கபட்டது.

இந்த திருமண நிகழ்ச்சியில், வழக்கறிஞர் குமாஸ்தாகள் ரம்யா, திவ்யா, லட்சுமி, ரேஷன் கடை பாலகிருஷ்ணன், பாக்யலட்சுமி, அதிமுக மாவட்ட பிரதிநிதி ராமசாமி, கவுன்சிலர் விஜயகுமார், விமல் ராஜ், மணமகள் தந்தை ஜெயபிரகாஷ், மணமகன் தாய் அலமேலு, பிரமிளா, அன்டனி, சகாய நிர்மலா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்த க்கது.

# ஜித்தோகுகாய் கராத்தே பயிற்சி பள்ளி மாணவர்களுக்கான கலந்தாய்வு தேர்வு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா




ஈரோடு மாவட்ட ஜித்தோகுகாய் கராத்தே பயிற்சி பள்ளியின் சார்பாக மாணவர்களுக்கான சிறப்பு கலந்தாய்வு தேர்வு மற்றும் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் கராத்தே பயிலும் மாணவ, மாணவிகளின் திறன்களை மேம்படுத்தும் வகையில் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டன.பயிற்சிமுகாம் மாநிலத் துணைச் செயலாளர் ஈரோடு மாவட்ட கராத்தே சங்க செயலாளருமான கராத்தே மாஸ்டர் சக்திவேல் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமிற்கு சிறப்பு பயிற்சியாளர்கள் சென்சாய் பிரேம் பகதூர் மற்றும் ஹரி ஆகியோர் முன்னிலை வகித்து, மாணவர்களுக்கு தற்காப்புக் கலை நுணுக்கங்கள் குறித்து சிறப்பான முறையில் பயிற்சி அளித்தனர். இந்த தகுதித் தேர்வு மற்றும் பயிற்சி முகாமில் 150-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, கலந்தாய்வு தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் ஈரோடு மாநகர திமுக மாநகர செயலாளர் சுப்பிரமணியம் கலந்துகொண்டு, தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்வில் மல்யுத்தம் மோகன்ராஜ் மற்றும் கராத்தே பயிற்சியாளர்கள் கே.எம்.சந்திரசேகர், மணி, கீர்த்தி, யுகேஷ், பூர்ணிமா தேவி, நதின் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பங்கேற்ற கராத்த மாணவ, மாணவிகளுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் காலை மதிய உணவு வழங்கப்பட்டது.

# உதவி பேராசிரியர் தேர்வு முடிவை ரத்து செய்ய வேண்டும்

## எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்



அரசு கல்லூரி உதவிப் பேராசிரியர்தேர்வு முடிவுகளில் முறைகேடுகள் நடைபெற்றதாக எழும் புகார்கள் மீது உரிய விசாரணை மேற்கொள்ளவும், இளைஞர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பேராசிரியர் பணியிடங்களுக்கு தகுதியானவர்களை நியமிக்க வேண்டும் என்று தவெக அரசை அதிமுக பொதுச் செயலாளரும், தமிழ்நாடு முன்னாள் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு ள்ளதாவது:-

கிட்டத்தட்ட 25 வருட இடைவெளிக்குப் பிறகு. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அரசு கலை மற்றும்அறிவியல்கல்லூரிகளில் உள்ள சுமார் 2,708 உதவிப் பேராசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக கடந்த விடியா திமுக ஆட்சியில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு நடத்தப்பட்டது. இத்தேர்வில் பொத்தம் 42.064 தேர்வர்கள் பங்கேற்றனர். தமிழ் மொழிக்கான தேர்வு தவிர, 150 மதிப்பெண்களுக்கான பாடம் சார்ந்த புறநிலை விளாக்கள் பகுதி மற்றும் 50 மதிப்பெண்களுக்கானவிளக்கக் கட்டுரைத் தாள் தேர்வு நடைபெற்றது.


உதவிப் பேராசிரியர் எழுத்துத் தேர்வு முடிவுகளை ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) கடந்த 25.5.2026 வியாழக் கிழமையன்று அறிவித்ததைத் தொடர்ந்து, விளக்கக் கட்டுரைகளின் மதிப்பீட்டில் பெரும் அளவிலான முறைகேடுகள் நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. புறநிலை விளாத்தாளில் அதிக மதிப்பெண் பெற்ற பல தேர்வர்கள், விளக்கக் கட்டுரைப் பிரிவு தேர்வில் 42 தேர்வர்கள் 0 மதிப்பெண்ணும் மற்றும் 106 தேர்வர்கள் ஒரு மதிப்பெண்ணும் பெற்றுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, புறநிலை வினாத்தாளில் 150-க்கு 111 மதிப்பெண் பெற்ற தமிழ் பிரிவைச் சேர்ந்த ஒரு தேர்வருக்கு, கட்டுரைத் தாளில் பூஜ்ஜிய மதிப்பெண் வழங்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறைந்த மதிப்பெண்

இதற்கு நேர்மாறாக, புறநிலை வினாத்தாளில் குறைந்த மதிப்பெண்களைப் பெற்ற தேர்வர்களுக்கு, 50 மதிப்பெண்களுக்கான விளக்கக் கட்டுரை மதிப்பீட்டில், 50-க்கு 49 வரை அதிக மதிப்பெண்கள் வழங்கப்பட்டதாகவும், இது அவர்களின் இறுதித் தரவரிசையை மாற்றியமைத்ததாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

புறநிலை வினாத்தாளில் 100மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற ஒரு தேர்வர், விளக்கமுறை விளாத்தாளில் எப்படி பூஜ்ஜியம் மதிப்பெண் பெற முடியும்? அல்லது இதற்கு நேர்மாறாகஎப்படி நடக்க முடியும்? மதிப்பெண்கள் சீரற்ற முறையில் வழங்கப்பட்டுள்ளன என்பதை இது பிரதிபலிக்கிறது. படித்த இளைஞர்களின் எதிர்காலத்துடன் TRB விளையாடுகிறது" என்று தேர்வு எழுதியவர்களும். தமிழ் நாடு அரசு கலைக் கல்லூரி சிறப்பு விரிவுரையாளர் சங்க நிர்வாகிகளும் கருத்து தெரிவித்துள்ளனர். பல வருடக் காத்திருப்புக்குப் பிறகு வேலை பெறுவதற்காக நாங்கள் இந்தத் தேர்வை எழுதினோம். ஆனால், இந்தத் தன்னிச்சையான மதிப்பீடு எங்கள் எதிர்காலத்தை ஒரு முச்சந்தியில் நிறுத்தியுள்ளது." என்று கட்டுரைத் தாளில் ஒற்றை இலக்க மதிப்பெண் பெற்ற தேர்வர்கள் புகார் கூறியுள்ளனர். மதிப்பெண்களுக்கானவிளக்கக்கட்டுரை மதிப்பீட்டில் குறைந்த மதிப்பெண் வழங்கியதன் மூலம், TRS நடத்திய உதவிப்பேராசிரியர் தேர்வில் விளக்கக் கட்டுரை மதிப்பீட்டில் முறைகேடுகள் நடந்ததாககுற்றச்சாட்டு எழுந்துள்ளது.

# பெருந்துறை விசிக ஆலோசனைக் கூட்டம் 4 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்



ஈரோடு பெருந்துறை சட்டமன்றதொகுதிவிடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் தலைமையில், பெருந்துறை தலைமை அலுவலகத்தில் சிறப்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில்கட்சியின்கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பது மற்றும் மக்கள் நலப் பணிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு நான்கு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன்படி, முதலாவதாக வருகின்றஆகஸ்ட் 17ஆம் தேதி நடைபெறவிருக்கும் விசிக தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., அவர்களின் பிறந்தநாள் விழாவை தொகுதி முழுவதும் எழுச்சியோடு கொண்டாடுவது என்றும், இரண்டாவதாக பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய மற்றும் விளிம்புநிலை மக்களுக்கு அரசிடம் இருந்து இலவச வீட்டு மனைப் பட்டாக்களைப் பெற்றுத் தர உரிய நடவடிக்கை எடுப்பது என்றும்தீர்மானிக்கப்பட்டது. மேலும் மூன்றாவதாக, கட்சியின் கொள்கைகளையும் செயல்பாடுகளையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்த்து பெருந்துறை சட்டமன்றத்தொகுதியில் கட்சியின் கட்டமைப்பை அடித்தட்டு மக்கள் வரை பலப்படுத்துவது என்றும், நான்காவதாக இளைய சமுதாயத்தைச் சீரழிக்கும் போதைப் பொருட்களின் தீமைகளுக்கு எதிராகப் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிரம்மாண்ட விழிப்புணர்வுப் பேரணி ஒன்றை நடத்துவது என்றும் ஒருமித்த கருத்துடன் தீர்மான ங்கள் நிறைவேற்ற ப்பட்டன. இந்த நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள், மகளிர் பொறுப்பாளர்கள்,

இளஞ்சிறுத்தைகள் எழுச்சிபாசறைபொறுப்பாளர்கள், கிறிஸ்தவ சமூக நீதி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் கிளை பொறுப்பாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் 2,070 போதை மாத்திரைகள் பறிமுதல்: 3 பேர் கைது



தூத்துக்குடி பிரையண்ட் நகர் பகுதியில் விற்பனைக்காகபதுக்கி வைக்கப்பட்டிருந்த 2,070 போதை மாத்திரைகளை பறிமுதல் செய்த தனிப்படை போலீசார், மூன்று பேரை கைது செய்து, கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு இருசக்கர வாகனங்களையும் பறிமுதல் செய்தனர்.

தூத்துக்குடி மாநகரில் மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு தற்போது மூன்று கடைகள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. இதனால் மதுபானம் வாங்க மக்கள் நீண்ட தூரம்செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், கடைகளில் நீண்ட வரிசைகளும் காணப்படுகின்றன. இந்தச் சூழலைப் பயன்படுத்தி, மதுவுக்கு மாற்றாக போதை மாத்திரைகளை சட்டவிரோதமாக விற்பனை செய்யும் கும்பல்கள் செயல்பட்டு வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா உத்தரவின்பேரில் தனிப்படை போலீசார் பிரையண்ட் நகர் பகுதியில் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, இரண்டு இருசக்கர வாகனங்களில் சந்தேகத்திற்கிடமாக இருந்த மூன்று பேரை பிடித்து சோதனையிட்டதில், அவர்கள் மறைத்து வைத்திருந்த 2,070 போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன.

### தேசிய போலியோ சொட்டு மருந்து தினத்தினை முன்னிட்டு

# ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர் செங்கோட்டையன் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமினை குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், பேருந்து நிலைய வளாகத்தில்,தேசியபோலியோ சொட்டு மருந்து தினத்தினை முன்னிட்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குதீவிரபோலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமினை நேற்று (28.06.2026) குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து, குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தினை வழங்கினார்.இம்முகாமில்வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் அவர்கள் பேசும்போதுதெரிவித்ததாவது.

போலியோ எனப்படும் இளம்பிள்ளை வாத நோயை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில் தீவிரபோலியோசொட்டு மருந்து முகாமானது பொதுசுகாதாரம்மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் ஈரோடு மாவட்டத்தில் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், சத்திரங்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் உள்ளிட்ட மொத்தம் 1,385 மையங்களில் 5 வயதிற்குட்பட்ட சுமார் 1.57 இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் வகையில் ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்கள் அதிகம் கூடும்இடமானபேருந்து நிலையத்தில் இந்த சிறப்பு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. வெளியூர் செல்லும் பயணிகளின் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் தற்காலிக மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மூலமும்சொட்டுமருந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், ஏற்கனவே எத்தனை முறை போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் மீண்டும் சொட்டு மருந்து வழங்கப்படுவது அவசியம். எனவே பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அருகிலுள்ள முகாம்களுக்கு அழைத்துச் சென்றுதவறாமல்போலியோ சொட்டு மருந்து வழங்கி, போலியோ இல்லாத ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என தெரிவித்தார்.

இம்முகாமில்,மாவட்ட சுகாதார அலுவலர் மரு. அருணா, கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் த

சிந்துஜா, கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளர் மங்கையர்கரசன், கோபிசெட்டிபாளையம் வட்டாட்சியர் திரு.கவியரசு, கோபிசெட்டிபாளையம் வட்டார மருத்துவ அலுவலர் மரு.செந்தில்குமார். மருத்துவர்கள்.செவிலியர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



### தேசிய போலியோ சொட்டு மருந்து தினத்தினை முன்னிட்டு

# காந்திஜி ரோடு, நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைச்சர் விஜய் பாலாஜி சொட்டு மருந்து வழங்கும் முகாமினை தொடங்கி வைத்தார்

ஈரோடு மாவட்டத்தில் கைத்தறி,துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜிதீவிரபோலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமினை குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். ஈரோடு மாநகராட்சி, காந்திஜி ரோடு, நகர்ப்புறஆரம்பசுகாதார நிலையத்தில், தேசிய போலியோ சொட்டு மருந்து தினத்தினை முன்னிட்டு, மாண்புமிகு கைத்தறி,துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் திரு.ம.விஜய் பாலாஜி அவர்கள் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குதீவிரபோலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமினை நேற்று (28.06.2026) குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து, குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தினை வழங்கினார்.

இம்முகாமில் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் பேசும்போதுதெரிவித்ததாவது. போலியோ தொற்றுபரவாமல்தடுக்கும் வகையில்,5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தொடர்ந்து போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள்,துணை சுகாதார நிலையங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், சத்திரங்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் உள்ளிட்ட மொத்தம் 1,385 மையங்களில் 5 வயதிற்குட்பட்ட சுமார் 1.57 இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன. மேலும், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் நடமாடும் குழுக்கள் மூலம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட எல்லைப்பகுதிகள்,குடிசைப் பகுதிகள் மற்றும் பணி நிமித்தமாக இடம்பெயர்ந்துவாழும்மக்களின் குடியிருப்புகள் உள்ளிட்ட பகுதிகளில் சிறப்பு மையங்களும் அமைக்கப்பட்டு, எந்தக் குழந்தையும்விடுபடாதவகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், ஏற்கனவே எத்தனை முறை போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும், மீண்டும் சொட்டு மருந்து வழங்குவது மிகவும் அவசியமானதாகும். எனவே பெற்றோர்கள்

தங்களது குழந்தைகளை அருகிலுள்ள முகாம்களுக்கு அழைத்துச் சென்று போலியோ சொட்டு மருந்து வழங்கி, போலியோ இல்லாத சமுதாயத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்தார்.

இம்முகாமில், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மூன்றாவது மண்டல குழு தலைவர் சசிகுமார், மாநகர நல அலுவலர் மரு.கௌரி சரவணன், துணை ஆணையாளர் அசோக்குமார், வார்டு உறுப்பினர்கள் ஜெகதீஷ், சபுராமா ஜாபர் சாதிக், மருத்துவர்கள், செவிலியர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

### முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு

# அமைச்சர் விஜய் பாலாஜி நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கினார்



தமிழகவெற்றி கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான ச.ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டும், கைத்தறி, ஜவுளித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி பிறந்தநாளையும் முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஈரோடு மாநகர் பெரியார் நகர் 80 அடி சாலை பகுதியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில்

தமிழக வெற்றி கழகத்தின் ஈரோடு மாநகர் மாவட்ட கழக இணைச் செயலாளர் H.ஹக்கீம் தலைமையில், பெரியார்நகர் பகுதி செயலாளர் அண்ணா நகர் சரவணன்,பெரியார்நகர் பகுதி இணைச்செயலாளர் N.அறிவரசன் முன்னிலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளர்களாக

கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் K.K. ஆனந்த்மோகன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். அதன் பிறகு பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ- மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர , பெரியார் நகர் பகுதி கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# வார விடுமுறையையொட்டி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் குவிந்த சுற்றுலா பயணிகள்



தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலமான தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு கர்நாடகம், ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள். அவர்கள் அருவியில் குளித்தும், பரிசலில் சென்றும் மகிழ்வார்கள்.

பரிசல் சவாரி

இந்த நிலையில் வார விடுமுறையையொட்டி இன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் ஒகேனக்கல்லில் குவிந்தனர். அவர்கள் எண்ணெய் மசாஜ் செய்து கொண்டு காவிரி ஆற்றில் பல்வேறு இடங்களில் குளித்தனர்.

பின்னர் அவர்கள் குடும்பத்தினர், நண்பர்களுடன்பாதுகாப்புஉடை அணிந்து பாறைகளுக்கு இடையே காவிரி ஆற்றில் உற்சாகமாக பரிசல் சவாரி சென்று மகிழ்ந்தனர்.

சுற்றுலா பயணிகள் முதலைப்ப ண்ணை, சிறுவர்பூங்கா உள்ளிட்ட பகுதிகளை சுற்றி பார்த்தனர். சுற்றுலா பயணிகள் வருகைஅதிகரித்ததால் கடைகள், உணவகங்களில் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்ததால் போலீசார் ஆலம்பாடி, மணல் திட்டு, மெயின் அருவி, பரிசல் துறை உள்ளிட்ட பகுதிகளில் தீவிர ரோந்து சென்று கண்காணித்தனர்.

# திருப்பூரில் அதிர்ச்சி: யூடியூப் பார்த்து வீட்டிலேயே பிரசவம் பார்த்த பெண் உயிரிழப்பு




திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி அருகே உள்ள தளவாய்பாளையம் பகுதியை சேர்ந்தவர் கார்த்திக். இவரது மனைவி சசிகலா (32). இந்த தம்பதியினருக்கு 4 வயதில் ஒரு பெண் குழந்தை இருக்கிறது. சசிகலாவுக்கு முதல் குழந்தை அறுவை சிகிச்சை மூலம் பிறந்திருந்தது. இதனால், இரண்டாவது குழந்தையையாவது சுகப்பிரசவத்தில் வீட்டிலேயே பெற்றெடுக்க வேண்டும் என தம்பதியினர் முடிவு செய்துள்ளனர்.

அதன் ஒரு பகுதியாக வீட்டிலிருந்தே சுகப்பிரசவம் பார்ப்பது தொடர்பாக யூடியூபில் பல வீடியோக்களை தொடர்ந்து பார்த்து வந்துள்ளார். இந்த நிலையில் தான் சசிகலாவிற்கு கடந்த 24-ம் தேதி பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. அப்போது குடும்பத்தினர் அந்த விபரீத முடிவை எடுத்துள்ளனர்.

அதன்படி தன் கணவர் கார்த்திக் மற்றும் மாமியார் சேர்ந்து சசிகலாவிற்கு பிரசவம் பார்க்க தொடங்கினர்.

ஆண் குழந்தை பிறந்தது

அதில் இவர்கள் நினைத்தது போல சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் துரதிர்ஷ்டமாக சசிகலாவிற்கு பிரசவத்தின்போது அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டது. உடல்நிலை மிக மோசமடைந்தது. இதனால் சசிகலாவை பெருந்துறையில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

உயிரிழப்பு

இதனை தொடர்ந்து, மேல் சிகிச்சைக்காக கோவை மாவட்டத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு சசிகலா மாற்றப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவர்கள் தொடர்ந்து தீவிரமாக சிகிச்சை அளித்தும் பலனின்றி சசிகலா இன்று பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த கொடூர சம்பவம் ஊத்துக்குளி காவல்துறையினர் இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து, மனைவியின் உயிரிழப்புக்கு காரணமான கணவர் கார்த்திக் மற்றும் குடும்பத்தினரிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 'I will return': Sheikh Hasina sets a timeline for Bangladesh return two years after ouster



*Almost two years after she was driven out of her country and sought refuge in India, former Bangladesh Prime Minister Sheikh Hasina adopted a defiant tone on her return, saying she would go back "this year".*

*In an interview with NDTV, Hasina alleged that the verdict against her was an attempt to make her party, the Awami League, "leaderless", but she said such attempts will not succeed. Bangladesh's International Crimes Tribunal found Hasina guilty of crimes against humanity and sentenced her to death in November last year.*

*"The verdict against me is not justice. It is part of an illegal, unconstitutional, and politically motivated process. The judiciary has been turned into an instrument of political revenge to make the Awami League leaderless. Such attempts have been made before. They failed then, and they will fail again," she said in the interview. Hasina said that she doesn't fear death, pointing out the assassination of her father, Sheikh Mujibur Rehman, credited as the founder of Bangladesh, and the loss of her family in 1975. She asserted that she would be back in Bangladesh "this year".*

*"I do not fear death. In 1975, I lost my parents, my brothers, and almost my entire family. On 21 August, there was an attempt to kill me with grenades. Many conspiracies have been hatched against me. But breaking through every web of conspiracy, I stood beside the people of Bangladesh. I was elected Prime Minister five times by the people's vote and worked for the country's unprecedented development.*

*Almost my entire life has been tied to the people of Bangladesh, to the Awami League, to the democratic struggle, and to the development of Bangladesh.*

*So, I want to say clearly: overcoming every obstacle and every conspiracy, I will return to my country this year," Hasina added.*

*Why was Sheikh Hasina found guilty in Bangladesh?*

*The special tribunal ruled that Sheikh Hasina was responsible for "ordering, inciting, and failing to prevent" what the court called "a brutal, state-orchestrated crackdown on student-led protests" in July 2024.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.